## இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் சபை – 2017

இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் சபை அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை 2018 மே 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையான இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக் கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01**

நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் மூலம் தேவைப்படுத்தப்பட்டுள்ள அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்து சொத்துக்களையும் பொறுப்புக்களையும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்ய முடியாது என்ற போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் ஆராய்ச்சி நிறுவனத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 144,452 மீதியும் பெற வேண்டிய ரூபா 46,217 மீதியும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட்டு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 98,235 தேறிய மீதி காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சிக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 10,801,000 மானியமும் ரூபா 11,277,588 ஆராய்ச்சி செலவுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 22 (இ) பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிலிருந்து உபகரங்களுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகளை காலக்கழிவு செய்யாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நன்கொடைகளின் பெறுமதி ரூபா 114,697 ஆல் அதிகரித்தும் திரண்ட ஒதுக்கம் சமனான அளவால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் புத்துருவாக்கம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 449,480 தொகையான வருமானச் செலவுகள் மூலதனச் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்களின் கிரயம் ரூபா 449,480 இனாலும் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 2,809 இனாலும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்களை அகற்றுதல் நட்டம் ரூபா 157,949 ஆக இருந்தும் விபரமான வருமானக் கூற்றில் அது ரூபா 161,854 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ஆராய்ச்சிக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதன மானியம் ரூபா 5,856,588 தொகை மறை மீதியாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் சரியான தன்மையை கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்து கொள்ள முடியாதிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆரம்ப மற்றும் இடர் கடன் மீதியை இடர் கடன் பதிவேட்டிலுள்ள (Loan Interest and Installment Schedule) மீதியுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 49,992 மற்றும் ரூபா 99,981 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணம் விளக்கமளிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாத ஆராய்ச்சிக் கட்டுநிதி ரூபா 650,131, தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களின் மறை மீதி ரூபா 21,564 என்பன 2015 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட போதிலும் அம் மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டுநிதியானது அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 31,963 முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 5,432,734 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,434,932 ஆக இருந்தனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,997,802 முன்னேற்றமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நிர்வாகச் செலவுகள் ரூபா 6,262,761 ஆல் அதிகரித்திருந்தும் அரசாங்க மானியம் ரூபா 10,250,000 ஆல் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபையின் தேறிய நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,594,269 தொகையான அது 2016 ஆம் ஆண்டின் பேது ரூபா 2,434,932 வரை குறைவடைந்திருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 5,437,734 வரை மீண்டும் முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது நிறுவனத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 24,507,650 இலிருந்து ரூபா 34,399,045 வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சி கொள்கைச் சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சபையின் பிரதான செற்பாடுகளை நிறைவேற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 13 ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 10,801,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மத்தியில் கமத்தொழில் ஆராய்ச்சி முன்னுரிமை, கமத்தொழில் தரவுத் தகவல்களைக் கண்டுபிடித்தல், நாளேடுகளைத் தயாரித்தல், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே தொடர்புகள் ஆகிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 37 சதவீதம் 21 சதவீதம், 8 சதவீதம் ஆக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் INFORM – 2017 வருடாந்த பயிற்சி செயலமர்வின் கீழ் 20 வெளிவாரி நிறுவனங்கள் அவதானிக்கப்பட்டு ஆராய்ச்சிக்காக நிறுவனத்தின் மூலம் இனங்காணப்பட்டுள்ள கணனி மென்பொருட்களில் காணப்பட்ட சிக்கல்கள் மற்றும் பலவீனங்களைத் தீர்த்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது அந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை சபைக்கு அழைத்து ஒரு கூட்டத்தின் மூலம் தெளிவுபடுத்துதல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு ரூபா 300 மில்லியன் வீதம் செலவு செய்து எஞ்சியுள்ள 05 ஆண்டுகள் காலத்திற்காக சபையினால் தேசிய விவசாய ஆராய்ச்சிகளுக்கு வெளிநாட்டு முதுமானிப் பட்டங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக பொருத்தமான பல்கலைக்கழங்களைத் தெரிவு செய்வதற்கு அமைச்சு செயலாளர், சபையின் தலைவர், செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய 06 உத்தியோகத்தர்கள் ரூபா 4,341,358 செலவில் வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

### 4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டின் போது சபையினால் அமுல்ப்படுத்தப்பட்ட ஒரு செயற்திட்டத்தின் நிதிக் குற்றச்சாட்டு சம்பந்தமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை நடாத்தி வந்த இரண்டு பேராசிரியர்களுக்கு அந்த நிலைமையை கவனத்தில் கொள்ளாது வெளிப் புலனாய்வுகளை நடாத்தும் இரண்டு நிறுவனங்களின் புலனாய்வுக் குழுக்களின் பதவிகளுக்காக சபையினால் நியமிக்கப்பட்டு ரூபா 95,000 மொத்த தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 116,150 பெறுமதியான 04 டயர்களை கணக்காய்வுத் திகதியான 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 ஆளணி நிர்வாகம்

தகைமையுள்ள ஒரு உத்தியோகத்தரை கணக்காளர் பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படாது சிரேஷ்ட விஞ்ஞானி ஒருவர் அப்பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய அமைச்சினால் பட்டினி ஒழிப்பு மற்றும் காலநிலை மாற்றங்களும் அதன் தாக்கத்தை குறைத்தலும் என்ற இலக்குகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி தகவல்களை சேகரிக்கும் செயற்பாடுகளை ஒப்படைத்தல் இடம் பெற்றிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.4.3 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைத் தத்துவங்களுக்கு இணக்கமற்ற வகையில் வெளிநாட்டுப் பயிற்சிக்காகப் பங்குபற்றிய இரண்டு உத்தியோகத்தர்கள் அது தொடர்பாக ரூபா 171,600 பெறுமதியான விமான பயணச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்யும் பெறுகைக் குழுவின் அங்கத்தவர்களாகச் செயற்பட்டிருந்தார்கள்.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (பீ) பந்தியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தவரேனும் உரிய பெறுகை தொடர்பான விசேட அறிவு உள்ளவாறாக இருக்க வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும் சபையின் மூலம் மீளாய்வாண்டின் போது இடம் பெற்றிருந்த ரூபா 2,513,120 தொகையான கணனிகளையும் துணைக்கருவிகளையும் கொள்வனவு செய்யும் பெறுகை தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக விசேட நிபுனர் பங்குபற்றி இருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட 39 விடயங்களின் செலவுகளை உள்ளபடியான செலவுகளுடன் ஒப்பீடு செய்த போது 19 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்படுதல் |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | தேவைப்பாட்டை கவனத்தில் கொள்ளாது கொள்வனவுகளை மேற்கொள்ளல். |
| (இ) | பெறுகை முகாமைத்துவம் | பெறுகை வழிகாட்டிகளுடனான இணக்கமின்மைகள் காணப்படல். |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்திட்டங்களையும் அமுல்படுத்தும் போது செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பாதீடு தயாரிக்கப்படாமை. |